<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

<u>அசல் வழக்கு எண்.177/2016</u>

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் புதன் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. கி. கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சித்ரா | கணவர் பெயர் | : சுப்பிரமணியன் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 11.09.2024

**P.W. : 1**

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா E அட்டவணை 11வது இன சொத்தை பொறுத்து பார்வதி அன்ட் கோ என்ற நிறுவனம் இருக்கிறதா என்றால் இல்லை. அந்த கடை 2016ல் மூடப்பட்டது. அந்த நிறுவனம் சேது ரெத்தினபுரத்தில் இருந்ததா என்றால் ஆமாம். மேற்படி நிறுவனம் இருந்த இடத்தில் ஸ்ரீ பார்வதி அன்ட் கோ என்ற நிறுவனத்தை நான்தான் புதியதாக தொடங்கி நடத்தி வருகிறேன். பார்வதி அன்ட் கோ என்ற நிறுவனத்தை 2015ம் ஆண்டு மட்டும் சுப்பிரமணியன் பெயரில் இருந்தது. பார்வதி அன்ட் கோ அந்த சமயத்தில் பங்குதாரர் நிறுவனமாக இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் சுப்பிரமணியை தவிர வேறு யார் யார் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றால் முருகப்பத் தேவர், சகுந்தலையம்மாள், சரஸ்வதியம்மாள் ஆகியோர் பெயர் இருந்ததாக எனக்கு தெரியும்.

சுப்பிரமணியன் உயிரோடு இருக்கும்போதே மேற்படி நபர்கள் பங்கை விலக்கி கொடுத்துவிட்டனர். அதன் பிறகு வேறு யாராவது சுப்பிரமணியுடன் பங்குதாரர் ஆக இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. சுப்பிரமணியன் இறந்த பிறகு பார்வதி அன்ட் கோ நிறுவனத்தை நான் தான் நடத்தினேன். என்னுடன் 2ம் பிரதிவாதி சிவலிங்கம் பங்குதாரர் ஆக இருந்தார். வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா E அட்டவணை 11வது இன சொத்தை பொறுத்து பார்வதி அன்ட் கோ என்ற நிறுவனத்தின் மதிப்பு ரூ.20 லட்சம் என குறைத்து போடப்பட்டது. வழக்கு போடும்போது அந்த நிறுவனத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்று என்னால் சொல்ல தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 உடன்படிக்கையானது அதில் கையொப்பத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 13.04.2017 அன்று ஏற்படுத்தப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.15 உடன்படிக்கையை யார் யார் ஏற்படுத்தினோம் என்றால் நான், சிவலிங்கம் மற்றும் பழனியப்பன் ஆகியோர்கள் சேர்ந்து ஏற்படுத்தினோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 விடுதலை உறுதிமொழி பத்திரத்தை எப்போது ஏற்படுத்தினோம் என்றால் 20.06.2017 அன்று ஏற்படுத்தினோம். வா.சா.ஆ.15 ஆவணத்தின் அடிப்படையில் ஏதேனும் நான் பணம் கொடுத்துள்ளேனா என்றால் 2ம் பிரதிவாதி சிவலிங்கத்திற்கு பணம் கொடுத்துள்ளேன். 13.04.2017 அன்று சிவலிங்கத்திற்கு நான் ரூபாய். 44லட்சம் பணம் கொடுத்தேன். அதற்கு முன்பாக சிவலிங்கத்திற்கு ஒருமுறை ரூ.3 லட்சமும், ஒருமுறை ரூ.8 லட்சமும் கொடுத்துள்ளேன். மேற்படி தொகைகளை எந்த தேதி எந்த மாதம், எந்த வருடம் கொடுத்தேன் என்றால் அந்த தொகைகளையும் சேர்த்து தான் ரூ. 44லட்சம் 13.04.2017ல் கொடுத்ததாக கூறுகிறேன். அவ்வாறு ரூ.3 லட்சம், ரூ. 8

லட்சம் கொடுத்ததற்கு சிவலிங்கத்திடம் ரசீது பெற்றுள்ளேனா என்றால் பேப்பரில் எழுதி வாங்கியுள்ளேன். அந்த பேப்பர் என்னிடம் உள்ளது. 13.04.2017 ல் ஏற்பட்டதாக கூறும் வா.சா.ஆ.15 உடன்படிக்கை எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் மணப்பாறை காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. காவல் ஆய்வாளர் இருந்தார் எனது தரப்பில் செல்வராஜ், முத்துக்குமார் ஆகியோரும் சிவலிங்கம் தரப்பில் சிலரும் வந்திருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. 13.04.2017–க்கு முன்பாக வங்கியில் கணக்கு இருந்தது. மணப்பாறை ஸ்டேட் பேங்க் கிளை மற்றும் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி, மணப்பாறை கிளை ஆகியவற்றில் எனக்கு வங்கி கணக்கு இருந்தது. பணம் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் எனது வங்கி கணக்கில் பணம் இருந்ததா என்றால் இல்லை. பார்வதி அன்ட் கோ நிறுவனம் எவ்வளவு மதிப்பு பெறும் என்பதை ஆடிட்டர் மூலம் மதிப்பீடு செய்யவில்லை. பஞ்சாயத்தார்கள் வைத்து என் கணவர் இருக்கும்போதே மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் மதிப்பு ரூ.2 கோடி என அப்போதே நிர்ணயிக்கப்பட்டது. பார்வதி அன்ட் கோ நிறுவனம் நகை அடகு தொழில் செய்தது. பார்வதி அன்ட் கோ மூடப்பட்டதாக சொல்லும் தேதியில் வாடிக்கையாளர் அடமானம் வைத்த தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களின் மதிப்பு சுமார் 1 கோடி இருக்கும். பார்வதி அன்ட் கோ மூடப்பட்ட அன்று வாடிக்கையாளர்களுக்கு அந்த அடமான பொருட்கள் திருப்பி கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் புதியதாக ஆரம்பித்ததாக சொல்லும் ஸ்ரீ பார்வதி அன்ட் கோ நிறுவனத்திற்கு ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த தங்க மற்றும் வெள்ளி அடமான பொருட்களை மாற்றிக் கொண்டேன் என்றால் சரிதான். ஸ்ரீ பார்வதி அன்ட் கோ நிறுவனத்தை என்று ஆரம்பித்தேன் என்றால் தேதி

நினைவில்லை. ஆனால் 2016 ல் புதியததாக என்பெயரில் லைசன்ஸ் பெற்றேன். 2016 ல் பார்வதி அன்ட் கோ நிறுவனம் கலைக்கப்பட்டதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16 தான் உள்ளது. 13.04.2017 என்ற தேதியில் வா.சா.ஆ.15 ல் குறிப்பிட்டுள்ளவாறு 33 லட்சத்தில் அந்த தேதியில் ரூ.3 லட்சம் முன்தொகையாக பெற்றுக்கொண்டு பாக்கி 30 லட்சத்தை 2 மாத காலக்கெடுவில் கொடுப்பதாக குறிப்பிட்டிருப்பது சரியானது தான். எந்த அடிப்படையில் 33 லட்சம் கொடுப்பதாக நிர்ணயிக்கப்பட்டது என்றால் என் கணவர் இருக்கும்போது பாக பிரிவினை போல் பேசி அந்த தொகையை நிர்ணயித்தார்கள். சுப்பிரமணியன் உயிருடன் இருக்கும்போதே பாக பிரிவினைபோல் பிரதிவாதிகளிடம் இருந்து ஆவணம் எழுதி வாங்கினார். அது எந்த தேதி வாங்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணம் வைத்துள்ளேனா என்றால் அதை சிவலிங்கம் எடுத்து சென்றுவிட்டார். இந்த விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. 13.04.2017–ற்கு முன்பு நான் ஏதேனும் பணம் சிவலிங்கத்திடம் கொடுத்தேனா என்றால் ரூ.8 லட்சம் கொடுத்துள்ளேன். அந்த விவரம் வா.சா.ஆ.15 ல் குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் செல்வராஜ் மற்றும் முத்துக்குமார் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். சாட்சி செல்வராஜ் பொன்னாமராவதி சேர்ந்தவர். முத்துக்குமார் புதுக்கோட்டையை சேர்ந்தவர். வா.சா.ஆ.15 ஆவணமானது வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டதா அல்லது முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்றால் முத்திரை தாளில் எழுதப்பட்டது. அந்த ஆவணமானது எவ்வளவு ரூபாய்க்கான முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் அது எனக்கு

தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்திற்கு பிறகு நான் சிவலிங்கத்திற்கு பாக்கி தொகையான ரூ. 30 லட்சத்தை கொடுத்துவிட்டேன். குறிப்பாக எவ்வளவு தொகை அவருக்கு கொடுத்தேன் என்று சொல்ல முடியாது. ரூ. 33 லட்சத்தை ஒரே தவணையில் கொடுத்தேன். அவ்வாறு அந்த தொகையை 16.07.2017 ல் கொடுத்தேன். அவ்வாறு நான் பணம் கொடுத்தற்கு ஏதேனும் பத்திரம் எழுதி வாங்கினேனா என்றால் பத்திரம் காவல் துறையின் மூலம் எழுதி வாங்கியுள்ளேன்.

**(வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.